நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மாநில விவசாய பட்ஜெட்டின் தேவை**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 24 Jan 2012 02:07:25 AM IST

பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட அணுகுமுறை தொடர்பான அறிக்கையில் இன்றைய வேளாண்மையில் உள்ள இக்கட்டுகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, மொத்த ஜி.டி.பி. அல்லது தேச மொத்த வருமான மதிப்பில் விவசாயத்தின் பங்கு ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருவதைக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

1950-51-ல் ஜி.டி.பி.யில் விவசாய உற்பத்தி வருமான மதிப்பு 55.3% என்ற நிலை 2000-01-ல் 23.9 % ஆக மாறி 2009-10-ல் 14.4 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. இதைத்தான் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை என்பார்கள்.

பழையபடி கட்டெறும்பை மீண்டும் கழுதையாக்க என்ன செய்யலாம் என்று மண்டையை உருட்டிய சில மாநில அரசுகளின் திட்ட வல்லுநர்கள், விவசாயம் மாநில அதிகாரத்தின் கீழ் வருவதால் மாநிலமே தனியாக விவசாய பட்ஜெட்டைத் தயாரிக்க வேண்டுமென்று முன்மொழிந்ததுடன் அவ்வாறே வழங்கியும் காட்டியுள்ளனர்.

கருணாநிதி மாநில முதல்வராயிருந்தபோது, மாநில விவசாய பட்ஜெட் என்ற பேச்சே வரவில்லை. இன்றைய முதல்வர் என்ன செய்வாரோ தெரியவில்லை. பிப்ரவரி 2011-ல் இந்தியாவில் முதல் முறையாக கர்நாடக அரசு விவசாயத்துக்கென்று தனி பட்ஜெட்டை வழங்கியது.

கர்நாடகத்தைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம் பின்னர் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களும் 2011-ல் மாநில விவசாய பட்ஜெட்டுகளை வழங்கியுள்ளன. பெரும்பான்மையான மாநிலங்களில் அப்படி ஒரு யோசனை இருப்பதாகத் தெரியவில்லை.

12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒட்டுமொத்த ஜி.டி.பி. வளர்ச்சி ஆண்டுக்கு 9 சதவிகிதம் என்ற இலக்கைத் தொட வேண்டுமானால், விவசாய வளர்ச்சி 4 சதவிகிதமாவது வளர வேண்டும் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

10-வது திட்டக்காலத்தில் 2.2 சதவிகித விவசாய வளர்ச்சி 11-வது திட்டக்காலத்தில் 3.3 சதவிகிதமாக உயர்ந்தாலும் இது போதுமானது அல்ல என்று கூறப்படுகிறது. இலக்குகளை

நிர்ணயிக்கும்போது விவசாய வளர்ச்சியைத் திட்டமிடும் விவசாயமே தெரியாத வல்லுநர்களின் கஞ்சத்தனம் புலனாகியுள்ளது.

ஜி.டி.பி. வளர்ச்சியில் விவசாயத்தின் பங்களிப்பை உயர்த்த வேண்டுமென்றால் அல்லது குறைந்தபட்சம் 1990 - 91 நிலையை எட்ட வேண்டுமானால், விவசாயத்தில் 4 சதவிகித வளர்ச்சி போதுமானதல்ல. ஜி.டி.பி. வளர்ச்சிக்கு மட்டும் 9 சதவிகிதம் என்று திட்டமிடுவோர், விவசாயத்தையும் 9 சதவிகித வளர்ச்சிக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

இப்படிப்பட்ட நம்பிக்கையை முன்வைக்காதபோது விவசாயம் எப்படி வளரும்? இன்றைய உலக வீழ்ச்சிப் பின்னணியில் நாம் செல்லும் அதே பாதையில் தொடர்வோமானால் ஜி.டி.பி. வளர்ச்சி 9 சதவிகிதம் எவ்வாறு எட்ட முடியாத கனவோ, அவ்வாறே விவசாயத்தில் 4 சதவிகித வளர்ச்சி என்ற குறைந்த இலக்கும் கனவுதான்.

கடந்த ஆகஸ்டில் வெளிவந்த 12-வது திட்ட அணுகுமுறை அறிக்கையில் விவசாயத்தில் மாநில அளவில் தனி பட்ஜெட் பற்றிய குறிப்பு எதுவுமில்லை.

ஆனால், மத்திய அரசின் விவசாய அமைச்சர் விவசாய அமைச்சரகம், ரயில்வே பட்ஜெட்டைப்போல் தனியாக விவசாய பட்ஜெட் வழங்கும் கருத்து உள்ளதாகப் பத்திரிகைக் கூட்டத்தில் பேசியதற்கு எதுவும் பொருள் உள்ளதாகத் தெரியவில்லை. ஒன்று மட்டும் தெளிவாகிறது.

மைய அளவிலும் மாநில அளவிலும் தனியாக விவசாய பட்ஜெட்டின் தேவை எழுந்துவிட்டாலும்கூட அதை எப்படி உருவாக்குவது என்ற கேள்வியில் நிபுணர்களிடையே முரண்பாடுகள் உள்ளன.

அப்படி எதுவும் ஒரு விவசாய பட்ஜெட் அரங்கேற்றம் ஆகும்போது எவற்றையெல்லாம் இதில் அடக்க வேண்டும் என்ற கேள்வி வரும். அதன் பதிலாக விவசாயத்துடன், கால்நடை, பால் உற்பத்தி, மீன் வளர்ப்பு, வனவளம், நீர்ப்பாசனம், விவசாய மின்சாரம், உரம் ஆகியவற்றையும் உடன் இணைத்து வரவு செலவுத் திட்டம் வேண்டும் என்று ஒருசாரார் கருத்திசைந்துள்ளனர்.

மற்றொருசாரார் விவசாயம் என்றால் விவசாய உற்பத்தியை மட்டுமே அலகாகக் கொண்டு வளர்ச்சித் திட்ட பட்ஜெட்டை அறிமுகப்படுத்த வேண்டும் என்கின்றனர்.

அதாவது ஆண்டுதோறும் உணவுதானியங்கள், பருப்பு, எண்ணெய் வித்து, கரும்பு காய்கறி - பழங்கள், பருத்தி போன்ற வணிகப் பயிர்களின் நிலப்பரப்பு, உற்பத்தி, உற்பத்தித்திறன் பற்றிய ஆண்டறிக்கையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டு வளர்ச்சி விகிதத்தைக் கண்காணித்துத் தொய்வுகளைச் சரிசெய்ய வேண்டும் என்கின்றனர்.

மூன்றாவதாக, ஒருசாரார் கால்நடை - பால் உற்பத்திக்கு மட்டும் ஒரு தனித்துறை வேண்டுமென்றும், இன்று விவசாயத்தைவிட பால் உற்பத்தி வளர்ச்சியின் பங்கு ஜி.டி.பி.யில் கூடுதலாயுள்ளதாலும், கிராமத்தில் பால் உற்பத்தி மட்டுமே கணிசமான வருமானத்தை வழங்குவதைக் கணக்கில் கொள்ள வேண்டும் என்கிறார்கள். தவிரவும் முட்டைக்கோழி வளர்ப்பு,

இறைச்சிக் கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு திட்டங்களும் சேர்ந்து கால்நடை வளர்ப்பு பட்ஜெட்டை விவசாயத்திலிருந்து பிரித்து வளர்ச்சியைக் கணக்கிட்டுத் தொய்வைச் சீர்செய்ய வேண்டுமென்று ஒருசாரார் கூறுகின்றனர்.

ஒரு நாட்டின் விவசாயக் கொள்கையை மத்திய அரசு வகுத்து மாநிலங்களுக்கு வழங்குகிறது. இது ஒரே அளவுள்ள ஃபிரீ சைஸ் சட்டையை வாங்கி 25 நபர்களுக்கும் ஒரே மாதிரி யூனிபார்ம் போட்டதுபோல் இருக்கும்.

மாநிலத்துக்கு மாநிலம் திட்டமிடுவதில் வேற்றுமை உண்டு. அசாம், மணிப்பூர், நாகாலாந்து போன்ற மாநிலங்களில் பன்றிகளைப் பசுமாடு போல் வளர்ப்பார்கள். ராஜஸ்தானில் ஒட்டகம், ஆடு முக்கியம். தில்லியில் எருமை. தென்மாநிலங்களில் "கோமாதா எங்கள் குலமாதா' என்பார்கள். கேரள மாநிலத்தில் விவசாயிகள் 7 சதவிகிதம். ஹிமாசலப் பிரதேசத்தில் 65.5 சதவிகிதம்.

மின்சாரம், உர உபயோகம், பாசன நிலப்பரப்பு, பயிர் வகை, பயிர் உற்பத்தி என்று ஒவ்வொரு கூறுகளிலும் மாநில வேற்றுமைகள் உண்டு.

ஆகவே, விவசாயக் கொள்கை / கால்நடைக் கொள்கை எல்லாம் மாநிலம் தயாரித்து அதை மத்திய அரசு பரிசீலித்து தேவைப்படி ஒழுங்கான முறையில் நிதி உதவி செய்வதுடன், மத்திய அரசின் விவசாயம் / கால்நடைக் கொள்கை மாநிலத் தேவைப்படி வழங்க வேண்டும்.

ஆகவே, ஒவ்வொரு மாநிலமும் தத்தம் தேவைகளைச் சரியானபடி பகுத்தறிந்து மாநில அளவில் விவசாயம் / கால்நடை - பால் உற்பத்தி தொடர்பான ஆண்டறிக்கை, பட்ஜெட் தயாரித்து மாநில அவைகளில் விவாதித்து ஒப்புதல் பெற்று மத்திய அரசுக்கு அனுப்பலாம்.

விவசாய பட்ஜெட்டை ஆண்டுதோறும் பருவமழை தொடங்குவதற்குமுன் ஏப்ரல் - மே மாதங்களில் விவாதிப்பது நன்று. அதற்கான நடைமுறை சாத்தியம் இல்லாதபோது, ரயில்வே பட்ஜெட்டைத் தொடர்ந்து மத்திய அரசு விவசாய பட்ஜெட்டைச் சமர்ப்பித்துவிட்டுப் பொது பட்ஜெட்டை விவாதிக்கலாம்.

மாநில அளவில் விவசாயம் / கால்நடை ஆண்டறிக்கை / பட்ஜெட் தயாரிக்கும் முன்னர் கிராமிய அளவில் திட்டங்கள் தயாரித்து மாவட்ட பட்ஜெட்டையும் தயாரிப்பது நன்று.

உதாரணமாகத் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேச மாநிலங்களை எடுத்துக்கொண்டால் புஞ்சைத் தரிசு நிறைய உள்ளது. இப்படிப்பட்ட புஞ்சைத்தரிசுகளை மேய்ச்சல் நிலமாக மாற்றுவதில் பெரிய சிக்கல் எதுவுமில்லை.

குளத்து வேலைத்திட்டத்தையும் புஞ்சை சாகுபடியில் கால்நடை தீவனப்புல் சாகுபடியுடன் தீவன மரங்களைப் பயிரிடுதலை மேற்கொள்ளலாம். மழைப்பொழிவு குறைவான ராலேகான்சித்தி - ஹவாரே பஜார் கிராமங்களில் எவ்வாறு கிராமிய அளவில் விவசாய மேம்பாட்டுக்குத் திட்டமிடப்பட்டதோ அவ்வாறே தமிழ்நாடு - ஆந்திர கிராமங்களில் திட்டமிடுவது கடினமல்ல.

தனியார் துறையில் பால்வளம் பெருகுவதைத் தடுத்து நிறுத்தி ஆவின் வளர்ச்சிக்கு உழைத்துப் பால் விலையைக் கட்டுக்குள் கொண்டு வரும் வழியைக் கவனிப்பது அவசியம். கால்நடை வளர்ப்போரின் தீவனத் தேவையை நிறைவேற்ற வேண்டும். எல்லாம் பேசுவதற்கு இனிப்பாகத்தான் உள்ளது. புஞ்சைத் தரிசுகளின் ஆக்கிரமிப்புகளையும் ஏரி, குள ஆக்கிரமிப்புகளையும் தடுப்பது எப்படி? குறைந்தபட்சம் வருவாய்த்துறை ஆவணங்களில் ஏரி, குளம் என்று பதிவாகியுள்ள புஞ்சை நிலங்களைப் பட்டா நிலங்களாக மாற்றும் நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

ஏரி, குளம் அல்லது நீர்வரத்து வழிகளில் திடீர் நகர்கள் - மனைப்பட்டா - விற்பனைகளைக் கண்டறிந்து தடை செய்யும் துணிச்சல் மாநில அரசுகளுக்கு வேண்டுமே!

மனைக்கட்டுகளாக மாறும் புஞ்சைத் தரிசுகள் எல்லாம் நஞ்சையாகி நாடு செழிக்க மாநில விவசாய பட்ஜெட், மாநிலக் கால்நடை - பால் உற்பத்தி பட்ஜெட் ஆகியவை மட்டும் போதுமானது அல்ல.

குத்துக்கத்தி, வீச்சறுவாள் எடுக்கும் கைகளில் மண்வெட்டி, கலப்பை, கடப்பாரை எடுத்து புஞ்சைத் தரிசுகளில் பாடுபடும் நாள் வரும்போது, விவசாயத்தில் வளர்ச்சி காண முடியும். அந்த நாள் வரும்போது ஜி.டி.பி.யில் வேளாண்மை வருமானம் 50 சதவிகிதம் கிடைத்து பொருளாதாரத் தொய்விலிருந்து நாடும் மீட்சி பெற்று எழுந்து நிற்குமல்லவா?

**தோட்டக்கலை பயிர்களுக்கு மைக்ரோ இரிகேசன் திட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2012,02:40 IST

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களுக்கு மைக்ரோ இரிகேசன் திட்டம் நூறு சதவீத மானியத்தில் 600 ஹெக்டேரில் செயல்படுத்தப்படுகிறது. இது சம்பந்தமாக விவசாயிகள் அதிகாரிகளை அணுகலாம்.


தமிழக அரசு தோட்டக்கலை பயிர்களை ஊக்கு விக்கும் வகையிலும், தண்ணீர் சேமிப்புகாகவும் மைக்ரோ இரிகேசன் என்னும் நுண்ணீர் பாசன திட்டத்தை நூறு சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்க அனுமதித்துள்ளது. நூறு சதவீத மானியம் என்பதால் இதற்கு கடும் போட்டி இருக்கும் என்பதால் முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பம் பெறப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் கலெக்டர் ஆஷீஷ்குமார் ஆலோசனையின் பேரில் தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் செய்யது மீராஞ்சி மற்றும் அனைத்து வட்டாரங்களில் உள்ள உதவி இயக்குநர்கள் மூலம் விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பம் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது. மொத்தம் இம் மாவட்டத்தில் நூறு

சதவீத மானியத்தில் அரசு ஒதுக்கீடு செய்துள்ள 600 ஹெக்டேரில் 480 ஹெக்டேர் சிறு,குறு விவசாயிகளுக்கும், 120 ஹெக்டேர் இதர விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது. வரும் மார்ச் முதல் தேதிக்குள் விவசாயிகள் இதற்கான விண்ணப்பம் செய்ய வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 43 ஆயிரத்து 850 ரூபாய் முழு மானியம் வழங்கப்படுகிறது. வாழை, காய்கறிகள், பூ மலர்கள் போன்ற பயிர்களுக்கு இவை வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இந்த திட்டத்தை நிறைவேற்ற அரசு அங்கீகாரம் பெற்ற 20 கம்பெனிகளில் எந்த கம்பெனியையும் விவசாயிகளே தேர்வு செய்து திட்டத்தை செய்து கொள்ளலாம் என்று துணை இயக்குநர் மீராஞ்சி தெரிவித்தார்.

**விவசாயத்துடன் புதிய தொழில்களிலும் ஈடுபடுங்கள்: கலாம் அறிவுரை**

First Published : 24 Jan 2012 01:46:22 AM IST



கொல்கத்தா, ஜன.23: விவசாயத்தோடு, புதிய தொழில்களிலும் ஈடுபட்டால் கிராமங்களில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று குடியரசு முன்னாள் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

"விவசாயமும், தொழில்துறையும்' என்ற தலைப்பிலான விவாதம் தொடர்பாக மின்னஞ்சலில் வந்த கேள்வியொன்றுக்கு பதிலளித்தபோது மேற்கண்ட கருத்தை அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

""உள்ளூர் கைவினைத் தொழில்கள், சுற்றுலா, அறிவுசார்ந்த உற்பத்திகள், சேவைத் துறைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தினால் புதிய நல்ல வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும். இதன் மூலம் மறைமுக வேலைவாய்ப்பின்மையும் குறைய வாய்ப்புள்ளது. மேலும் ஒவ்வொரு பகுதியின் தனித்தன்மையான திறமைகள் மேம்படுத்தப்பட வேண்டும். ஊரக மேம்பாட்டை பற்றி நாம் பேசும்போதெல்லாம் பெரும்பாலும் விவசாயத்தைப் பற்றியே பேசுகிறோம். நகரமயமாக்கலின்போது உள்ளூர் தொழில்நுட்பத்துக்கும், அந்த இடத்தின் தனித்தன்மையான திறன்களை வளர்ப்பதற்கும் குறைந்த அளவே கவனம் செலுத்துகிறோம்" என்றார்.

டார்கெட் 3 பில்லியன் என்ற புத்தகத்தில் கிராம முன்னேற்றத்துக்கு "டமதஅ (டதஞயஐஈஐசஎ மதஆஅச ஊஅஇஐகஐபஐஉந பஞ தமதஅக அதஉஅந)- என்ற திட்டத்தை கலாம் பரிந்துரைத்துள்ளார். இத்திட்டத்தின்படி, உள்ளூர் கலாசாரம் மற்றும் சூழலின் அடிப்படையிலான

தனித்தன்மையான திறன்களை மேம்படுத்துவது மற்றும் தீர்வுகளை அளிக்கக் கூடிய உரிய முயற்சிகளாக தொழில்நுட்பம் எப்படி அமைகிறது என்பதையும் அவர் விளக்கியுள்ளார்.

உள்ளூர் கலாசாரமும், மதிப்பு சார்ந்த சிந்தனைகளும் காப்பாற்றப்பட வேண்டுமென்றால் கற்பிக்கப்படும் கல்விகூட தனித்தன்மையுடையதாக இருக்க வேண்டும் என்று கலாம்

கூறியுள்ளார். புத்தகத்தில் அவர் மேலும் தெரிவித்தது:

"" புரா திட்டத்தின் நோக்கம் ஊரகப் பகுதிகளை நகரமயமாக்குவது அன்று. இத்திட்டத்தின் நோக்கம் உள்ளூர் திறன்களை வளர்த்து, உள்ளூர்வாசிகளுக்கு தொழில்முனைவு வாய்ப்புகளை உருவாக்கித் தருவது ஆகும். இதன்மூலம் நகர மேம்பாட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தி கிராமப்புறங்களில் நீடித்த வளர்ச்சியை நிலைப்படுத்துவதேயாகும். உள்ளூர் சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் மூலமும், அதேசமயம் அங்கு நிலவும் கலாசாரத்தை உயர்த்துவதன் மூலமே "சூழல் தொழில்முனைவோர்' என்ற புதிய வகை தொழில்முனைவோரை உருவாக்க முடியும்.

இதன் மூலம் ஊரகப் பகுதிகள் மாசுபடுவதிலிருந்து காக்க முடியும். தொழில்நுட்பமே ஊரக மேம்பாட்டுக்கு சிறந்த வாய்ப்பாகும். உலகிலுள்ள ஊரகப்பகுதிகளில் வாழும் 300 கோடிக்கும் அதிகமான மக்கள் முன்னேறுவதற்கு தொழில்நுட்பமே உதவும். கோடிக்கணக்கான மக்களின் முகத்தில் மகிழ்ச்சியை காணவேண்டும் என்ற கனவே என்னை 80 வயதிலும் உற்சாகமாக வைத்துள்ளது'' என்று புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மானாவாரி பகுதி அபிவிருத்தி திட்டத்தில் மானிய உதவி

First Published : 23 Jan 2012 11:04:48 AM IST

தேனி, ஜன. 22: தேனி மாவட்டத்தில் மானாவாரி பகுதி அபிவிருத்தித் திட்டத்தில் பழப்பயிர், காய்கறி மற்றும் தானியப் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு மானிய உதவி வழங்குகிறது,

இது குறித்து மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் சி.முருகன் கூறியது: மானாவரி நிலங்களில் ஒருங்கிணைந்த பண்ணையம் முறைகளைக் கடைபிடித்து விவசாய வருமானத்தை அதிகரிப்பதற்கு மானாவாரி பகுதி அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து குழு அமைத்து செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தில் சேரும் விவசாயிகள் தோட்டக்கலைத் துறை பரிந்துரைக்கும் ஒருங்கிணைந்த பண்ணைய முறையில் பல்லாண்டு பழப்பயிர்களை நடவு செய்து, ஊடு பயிராக காய்கறி, தானியப் பயிர் மற்றும் பயறு வகை பயிர்களை சாகுபடி செய்யலாம்.

இந்தத் திட்டத்தில் விவசாயிகளுக்கு ரூ.25 ஆயிரம் மதிப்பிலான நடவுப் பொருள் மற்றும் இடுபொருள்கள், ஆழ்துளைக் கிணறு அமைப்பதற்கு ரூ.25 ஆயிரம், நீர் இறைக்கும் மோட்டார் பம்புக்கு ரூ.10 ஆயிரம், தண்ணீர் பாய்ச்சுவதற்கு பி.வி.சி., குழாய்கள் அமைப்பதற்கு ரூ.10 ஆயிரம் உள்பட ஒரு ஹெக்டேருக்கு ரூ.70 ஆயிரம் மானியம் வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு 2 ஹெக்டேர் வரை இடு பொருள்கள் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தில் சேர விரும்பும் விவசாயிகள் தங்களது நிலத்தின் வரைபடம், சிட்டா, அடங்கல், புகைப்படம், குடும்ப அட்டை நகல். வங்கிக் கணக்கு பாஸ் புத்தகத்தின் நகல் ஆகியவற்றுடன் அந்தந்த வட்டார வேளாண்மை அலுவலர்கள் அல்லது தோட்டக்கலை அலுவலர்கள் அல்லது தோட்டக்கலை உதவி இயக்குநரிடம் விண்ணப்பிக்கலாம் என்றார்.

## 50 சத மானியத்தில் வெண்டை விதைகள் பெறலாம்

First Published : 23 Jan 2012 12:06:48 PM IST

கரூர், ஜன. 22: கரூர் மாவட்டம், தான்தோன்றிமலையில் தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 50 சத மானியத்தில் வீரிய ஒட்டு ரக வெண்டை விதைகள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

இதுகுறித்து தாந்தோன்றிமலை தோட்டக்கலை உதவி இயக்குநர் லூா. சொர்ணமாணிக்கம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் 50 சத மானிய விலையில் காய்கறி விதைகளை விநியோகம் செய்ய, கரூர் மாவட்டத் தோட்டக்கலை துணை இயக்குநர் வெ. சதாசிவம் உத்தரவிட்டுள்ளார்.

எனவே, தாந்தோன்றிமலை வட்டாரத்தில் 50 சத மானியத்தில் விநியோகம் செய்வதற்குத் தேவையான வெண்டை வீரிய ஒட்டுரக விதைகள் இருப்பு வைக்கப் பட்டுள்ளன.

விதிகளின்படி ஒரு விவசாயிக்கு அதிகப்பட்சமாக 0.50 ஹெக்டர் பரப்பிற்குத் தேவைப்படும் ஒரு கிலோ வெண்டை விதைகள் 50 சத மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே, வீரிய ஒட்டு ரக வெண்டை சாகுபடி செய்ய விரும்பும் தாந்தோன்றிமலை வட்டார விவசாயிகள், தாந்தோன்றிமலை வட்டார உதவித் தோட்டக்கலை அலுவலர்களை அணுகலாம்.

வெண்டை விதைகளை விதைப்பதற்கு முன்பு விதையுடன் அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் உரம் மற்றும் டிரைகோடெர்மா விரிடி உயிரி பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவற்றைக் கலந்து விதைப்பதன் மூலம், விதையுடன் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

வெண்டை வீரிய ஒட்டு ரகப் பயிர்களுக்கு ஹெக்டருக்கு 217 கிலோ யூரியா, 625 கிலோ சூப்பர் மற்றும் 166 கிலோ பொட்டாஷ் உரத்தை அடியுரமாக இட வேண்டும்.
பயிரின் வளர்ச்சியை அதிகப்படுத்த 19:19:19 என்ற நீரில் கரையும் உரத்தை லிட்டருக்கு 5 கிராம் என்ற அளவில் கலந்து, விதைப்பு செய்த 30-வது நாளிலிருந்து 3 முறை இலைவழியாகத் தெளிக்கலாம்.

மேலும், நிரந்தரமான பாசன ஆதாரங்களைக் கொண்ட விவசாயிகள், தாங்கள் பயிரிடும் வெண்டைப் பயிருக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்துப் பயனடையுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**கறவை மாடு, கோழி வளர்ப்புப் பயிற்சி முகாம்**

First Published : 23 Jan 2012 12:20:57 PM IST

பெரம்பலூர், ஜன. 22: பெரம்பலூர் அருகேயுள்ள பொம்மனப்பாடி கிராமத்தில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் ஆகியன சார்பில் கறவை மாடு, புறக்கடைக் கோழி வளர்ப்புப் பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பயிற்சிக்குத் தலைமை வகித்த, மாவட்ட நீர்வடிப்பகுதி முகமை உதவி இயக்குநர் கண்ணன் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தில் பொம்மனப்பாடி, சத்திரமனை, வேலூர், புதுநடுவலூர், நொச்சியம் உள்ளிட்ட கிராமங்களில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், பயனாளிகளுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், நாமக்கல் வேளாண் அறிவியல் மையத்துக்கு பயனாளிகள் கண்டுணர் சுற்றுலா செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இதன் முதல்கட்டமாக, இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது என்றார் அவர்.

வேளாண் அறிவியல் மைய கால்நடைத் தொழில்நுட்ப வல்லுநர் டாக்டர் பி.சிவகுமார் பேசுகையில், கறவை மாடுகளில் கன்றுகளின் கவனிப்பு, பராமரிப்பு, சினை மாடுகள் பராமரிப்பு, காளைகள் பராமரிப்பு, தீவனப் பராமரிப்பு, நுண்ணூட்டச் சத்துகளின் தேவை, நோய் பராமரிப்பு ஆகியவை குறித்தும், புறக்கடை கோழி வளர்ப்பில் நாட்டுக்கோழி இனங்கள், கொட்டகை அமைப்பு, செயற்கை வெப்பம் அமைத்தல், தீவனம் அளிக்கும் முறை, கோழிகளைத் தாக்கும் நோய்கள், அதைக் கட்டுப்படுத்தும் முறைகள், சரியான தருணத்தில் தடுப்பூசி போடுதல், நாட்டுக் கோழியைத் தாக்கும் ஒட்டுண்ணிகள், அதைத் தடுக்கும் முறைகள் குறித்து விளக்கினார்.

இதில் மாவட்ட நீர்வடிப்பகுதி உறுப்பினர் என். பூவேந்திரன், சமூகவியலர் மு. உதயகுமார், வேளாண்மையியலர் கு. வீரபாண்டியன், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஊராட்சித் தலைவர் சசி. அழகேசன் வரவேற்றார். ஊராட்சி துணைத் தலைவர் பரமசிவம் நன்றி கூறினார்.

**பறவைகள் சரணாலயத்தில் கணக்கெடுக்கும் பணி**

First Published : 23 Jan 2012 12:03:33 PM IST

திருப்பத்தூர், ஜன. 22: சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகேயுள்ள வேட்டங்குடிபட்டி பறவைகள் சரணாலயத்தில், கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் வனத்துறையினர் பறவைகளை கணக்கெடுக்கும் பணியில் ஞாயிற்றுக்கிழமை ஈடுபட்டனர்.

மாவட்ட வன அலுவலர் சம்பத்லால் குப்தா அறிவுறுத்தலின்படி, வனச்சரக அலுவலர் பழனிச்சாமி தலைமையில், திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரி முனைவர்கள் ஜி.வி. கோபிநாத், பி. சிவக்குமார், என். விஜய்ஆனந்த், ரம்யா, மற்றும் மாணவ, மாணவிகள் ஆகியோர் பங்கேற்ற பறவைகள் கணக்கெடுப்புப் பணி துவங்கியது.

இதில், வனச்சரக அலுவலர், பறவைகளின் இனம், அடையாளம், கணக்கெடுக்கும் முறை குறித்து அறிமுக உரையாற்றினார். காலை, மதியம், மாலை என 3 வேளையும் நடைபெற்ற இப்பணியின்போது, மாணவ, மாணவிகளுக்கு உதவியாக வனவர்கள் ராமச்சந்திரன், காசி, மாதவன், வனக்காப்பாளர்கள் பழனி, வீரபத்திரன், ஜெயபாண்டி, பன்னீர், ஜெயராமன் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

இப்பறவைகள் சரணாலயத்தில் 14 வகையான பறவைகள் கண்டறியப்பட்டன. இதில், நத்தை கொத்தி நாரை, பாம்புதாரா, முக்குளிப்பான், நாமக்கோழி, தாளைக்கோழி, புள்ளி அலகுவாத்து, நீர்காகம், பெரிய, சிறிய, நடுத்தர கொக்கு வகைகள் ஆகியன அதிகளவில் காணப்பட்டன.

மேலும், இப்பணியில் வனக்காவலர்கள் வள்ளியப்பன், சண்முகம், தயாளன், தினகரன், கண்ணபிரான், வீரையா கணேசன் ஆகியோரும் ஈடுபட்டிருந்தனர்.

**பார்த்தீனியம் செடிகளை அகற்ற வலியுறுத்தல்**

First Published : 23 Jan 2012 11:53:51 AM IST

காரியாபட்டி, ஜன. 22: பார்த்தீனியம் செடி மண்ணின் வளத்தை பாதிப்பதோடு, ஆடு, மாடுகள் மட்டுமின்றி மனிதர்களின் உடல்நலனைப் பாதிக்கக்கூடிய விஷச்செடி. இது சாத்தூர் பகுதியில் அதிகம் காணப்படுகிறது. கிராமங்களில் மூக்குத்தி பூச்செடி என அழைக்கப்படும் இந்த செடிகளின்

மகரந்தத் தூள்கள் காற்றில் பரவி சைனஸ், காய்ச்சல், சோரியாசிஸ் போன்ற நோய்களை ஏற்படுத்தும். நான்கடி உயரம் வளரும் இச்செடிகள் மண்ணின் நீர் சத்தை முழுமையாக உறிஞ்சி விடுகிறது. இச்செடிகளின் பாதிப்பு பற்றி, போதுமான விழிப்புணர்வு மக்களிடம் இல்லாததால், சாலையோரங்களில் பரவலாக வளர்ந்துள்ளது. இச்செடிகளை அகற்ற நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**விவசாயிகள், கொள்முதல் செய்வோர் கருத்துப் பரிமாற்றக் கூட்டம்**

First Published : 23 Jan 2012 11:53:43 AM IST

காரியாபட்டி, ஜன. 22: தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் கிருதுமால் உப வடிநிலப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அருப்புக்கோட்டை இனியா கேட்டரிங் கூட்ட அரங்கில் விவசாயிகள், கொள்முதலீò்ட்டாளர்கள் கருத்துப் பரிமாற்றக் கூட்டம் நடைபெற்றது.

சுகுணா பவுல்ட்ரி பீட் நிறுவனக் கொள்முதல் அலுவலர் செந்தில் பேசும்போது, மக்காச்சோள விவசாயிகளிடம் இருந்து நேரடியாகக் கூடுதல் விலை கொடுத்து கொள்முதல் செய்ய இருப்பதாகவும், அதன் வழிமுறைகளையும் தெரிவித்தார்.

என்.பி.ஆர். வேர்ஹவுஸ் உரிமையாளர் ஜெயராம், அனைத்து வேளாண் விளை பொருள்களையும் தரம் பிரித்து சேமித்து வைத்து நல்ல விலை கிடைக்கும்போது கூடுதல் லாபத்தில் விற்பனை செய்யுமாறு கேட்டுகொண்டார்.

சாத்தூர் லட்சுமி பார்ம் சீட்ஸ் நிறுவனப் பிரதிநிதி மாரியப்பன், கொத்தவரை விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் ஒப்பந்தப் பண்ணையம் மூலம் லாபகரமான விலைக்குக் கொள்முதல் செய்வதாகக் கூறினார்.

அருப்புக்கோட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சந்திரபாபு, ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிட்டங்கியில் இருப்பு வைத்து குறைந்த வட்டிக்கு பொருளீட்டுமாறு அறிவுறுத்தினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண் வணிக அலுவலர் காயத்ரிதேவி, உதவி வேளாண் அலுவலர் பெரியகருப்பன் ஆகியோர் செய்திருந்தனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

# வெங்காயம் விலை கடும் வீழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2012,02:35 IST

வெங்காய வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறைந்துள்ளது.
சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களில் இருந்து வெங்காயம் வருகிறது. அதிகளவில் விளைச்சல் இருந்ததால், கோயம்பேடு மார்க்கெட்டிற்கு வரத்து கடந்த இரண்டு வாரங்களாக அதிகரிக்க துவங்கியது. நாள்தோறும், 50 முதல் 60 லாரிகள் என்ற எண்ணிக்கையில் வெங்காய வரத்து இருந்தது. தற்போது, 80 முதல் 90 லாரிகள் என்ற அளவில் அதிகரித்துள்ளது.
இந்நிலையில், அதன் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு, தற்போது வெங்காயம் கிலோ ஒன்றுக்கு மொத்த விலையில் ஆறு ரூபாய் என குறைந்துள்ளது.
ஆந்திர மாநில வெங்காயம் கிலோ ஒன்றுக்கு ஆறு ரூபாய்க்கு விற்கப்படும் நிலையில், அதை விட தரமான கர்நாடக மாநில வெங்காயம் கிலோ எட்டு ரூபாய்க்கும், உயர் தரமான மகாராஷ்டிரா மாநில வெங்காயம் கிலோ 12 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.
இந்த வெங்காயத்தை வாங்கிச் செல்லும் சில்லரை வியாபாரிகள் ஐந்து ரூபாய் வரை கூடுதல் விலைக்கு விற்கின்றனர். வெங்காயம் மொத்த விலையில் குறைந்தபட்சம் ஆறு ரூபாய் எனவும், சில்லரை விலையில் அதிகபட்சமாக 15 ரூபாய் வரையும் விற்கின்றனர்.
மொத்த விலையில் ஏற்பட்டுள்ள இந்த வெங்காய விலை வீழ்ச்சி அடுத்தடுத்த மாதங்களிலும் தொடரும் என, வியாபாரிகள் தரப்பில் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.
கோயம்பேடு காய்கறி மார்க்கெட் வெங்காயம் மொத்த வியாபாரி சவுந்தரராஜன் கூறுகையில், ""மகாராஷ்டிரா மாநிலத்தில் விளைச்சல் அமோகமாக இருக்கிறது. இந்த உற்பத்தி மூன்று மாத காலத்திற்கு தொடரும் என்பதால், அடுத்தடுத்த மாதங்களிலும் வெங்காயத்தின் விலை குறைந்தே காணப்படும். மூன்று மாதத்திற்கு பின் வரத்தை பொறுத்து விலையில் சற்று மாற்றம் ஏற்படலாம்,'' என்றார்.

**"தானே' புயலால் பாதிக்கப்பட்ட காஞ்சி விவசாயிகள் கோரிக்கை எங்களையும் கவனிங்க : அழுகிய நெற்கதிர்களுடன் கலெக்டர் அலுவலகத்தில் மனு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2012,03:02 IST

கருத்தை பதிவு செய்ய

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்ட எல்லையில், "தானே' புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, புயல் நிவாரணம் வழங்கக் கோரி, பேரூராட்சி கவுன்சிலர்கள் மற்றும் விவசாயிகள், அழுகிய நெற்கதிர்களுடன், நேற்று, கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், "தானே' புயலால் கடலோரப் பகுதிகள் பாதிக்கப்பட்டன. விழுப்புரம் மாவட்டத்தை ஒட்டியுள்ள, இடைக்கழிநாடு பேரூராட்சிப் பகுதியில், சேதம் அதிகம் ஏற்பட்டது. இதில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. விவசாயிகளுக்கு மட்டும் நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதுவும் போதுமானதாக இல்லை. நீண்ட கால பயிர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என, குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

நேற்று, இடைக்கழிநாடு பேரூராட்சி கவுன்சிலர்கள், புயலில் அழுகிப்போன, பதராகிப்போன நெற்கதிர்களுடன், கலெக்டர் அலுவலகம் சென்றனர்.

மனுநீதிநாளையொட்டி, மக்களிடம் மனுக்கள் வாங்கிய, மாவட்ட வருவாய் அலுவலர் சுதர்சனத்திடம், "இடைக்கழிநாடு பேரூராட்சியில் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்' என வலியுறுத்தி, மனு கொடுத்தனர்.

இது குறித்து, இடைக்கழிநாடு பேரூராட்சி கவுன்சிலர்கள் பொன்செல்லப்பன், கிருஷ்ணமூர்த்தி, ஆகியோர் கூறியதாவது:இடைக்கழிநாடு பேரூராட்சிக்குட்பட்ட, கரும்பாக்கம், வெண்ணாங்குப்பட்டு, கோட்டைக்காடு, நல்லூர், கிராமங்களில், புயல் பாதிப்பு அதிகமாக உள்ளது.

வெண்ணாங்குப்பட்டு கிராமத்தில் மட்டும், 1,300 தென்னை மரங்கள், 700 பலா மரங்கள், 500 மா மரங்கள் அழிந்து விட்டன. நான்கு கிராமங்களிலும் சேர்த்து, 600 ஏக்கர் விளை நிலங்களில், பயிரிடப்பட்டிருந்த நெல் சேதமடைந்துள்ளது. ஆனால், அதிகாரிகள், காஞ்சிபுரம் மாவட்டத்தில், புயல் சேதமில்லை எனத் தெரிவித்துள்ளனர். விழுப்புரம் மாவட்டத்தையொட்டி அமைந்துள்ள, எங்கள் பகுதியை கணக்கிடவில்லை.

இது குறித்து, அதிகாரிகளிடம் மனு கொடுத்துள்ளோம். அவர்கள் நெல், நிலக்கடலை, போன்ற பயிர்களின் சேதத்தை மட்டும் கணக்கிட்டுள்ளனர். நீண்ட காலப் பயிர்களான, மா, பலா, தென்னை, முந்திரி, தேக்கு, வாழை போன்றவற்றை கணக்கில் எடுக்கவில்லை. பலர் வீடுகளை இழந்துள்ளனர். அவர்களும் கணக்கில் கொள்ளப்படவில்லை.

கோழிப் பண்ணைகளும் பலத்த சேதமடைந்துள்ளன. எனவே, அதிகாரிகள் சேதத்தை முழுமையாக கணக்கிட்டு, பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்கும், நிவாரணம் வழங்க வேண்டும்.இவ்வாறு இருவரும் தெரிவித்தனர்.

ரூ.4 லட்சம் ஒதுக்கீடு!

காஞ்சிபுரம் மாவட்டத்தில், "தானே' புயல் பாதிப்பால் ஏற்பட்ட சேதங்களை, வேளாண்மை, தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், வருவாய் துறை துணை தாசில்தார், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர், ஆகியோர் கொண்ட குழு ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தது.
அதில், ஆறு தாலுகாவில், 279 கிராமங்களில், 4,841.189 எக்டேர் நிலம் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்திருந்தனர். அதன் அடிப்படையில், 11 ஆயிரத்து 191 விவசாயிகளுக்கு, இழப்பீட்டுத் தொகை வழங்க, 4 கோடியே 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.
பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, அவர்கள் வங்கிக் கணக்கில், அவர்களுடைய இழப்பீட்டுத் தொகை வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் செலுத்தப்பட்டுள்ளது.
"பாதிக்கப்பட்ட விவசாயிகள், இழப்பீட்டுத் தொகையை பெற்று, மீண்டும் விவசாயம் செய்து பயன்பெற வேண்டும்' என, கலெக்டர் ஹனீஸ்சாப்ரா தெரிவித்துள்ளார்.

**மானிய விலையில் வேளாண் கருவிகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2012,21:46 IST

திண்டுக்கல் : ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கப்படுகிறது. தமிழக அரசின் வேளாண்மைப் பொறியியில் துறை சார்பில், ஆதிதிராவிடர், பழங்குடி விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானிய விலையில் நெல்நடவு இயந்திரம், அறுவடை, மினி டிராக்டர், பவர் டில்லர், ரோட்டாவேட்டர், களையெடுக்கும் கருவிகள், மரம் அறுக்கும் கருவி, மருந்து அடிக்கும் தெளிப்பான் ஆகிய கருவிகள் பெற்றுக் கொள்ளலாம். பண்ணை பணிகளில் ஆட்கள் பற்றாக்குறையை போக்கவும், செலவை குறைத்திடவும் வேளாண்மை கருவிகள் உதவுகின்றன. மானியக்கருவிகள் பெற நிலத்தின் கம்ப்யூட்டர் சிட்டா, அடங்கல், ரேஷன்கார்டு நகல், போட்டோ, ஜாதிச்சான்றிதழ் நகல், தேவையான கருவியின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவத்தின் விலைப்புள்ளிகளுடன் வேளாண்மை பொறியல் துறைஅலுவலகத்தை அனுகலாம், என, வேளாண்மை பொறியியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

**வீரிய ரக விதைகளை தனியாரிடம் வாங்க ஆர்வம் காட்டிய விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2012,22:42 IST

தேனி : வீரிய ரக நெல் விதைகளை தனியாரிடம் வாங்கி விதைப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி உள்ளனர். தேனி மாவட்டத்தில் தற்போது நெல் நடவுப் பணிகள் நடந்து வருகின்றன. விவசாயத்துறை சார்பில் ஏ.டி.டி., 36, ஐ.ஆர்., 50 ரக அரிசி விதைகள் சப்ளை செய்யப்பட்டுள் ளது.

ஆனால் மாவட்டத்தில் உள்ள மொத்த விவசாயிகளில் 17 சதவீதம் பேருக்கு மட்டுமே விவசாயத்துறை விதை சப்ளை செய்துள்ளது. மீதம் 83 சத வீத விவசாயிகள் வெளிமார்க்கெட்டில் தனியாரிடம் விதை வாங்கி உள்ளனர். பெரும்பாலான விவசாயிகள் வீரிய ஒட்டுரக விதைகளையே வாங்கி உள்ளனர்.

இந்த ரக விதைகளில் இருந்து மீண்டும் விதைகளை பெற முடியாது. ஒரு முறை விதைத்து அதற்குரிய விளைச்சலை மட்டுமே பெற முடியும். ஒவ்வொரு விவசாயிகளும் வெவ்வேறு கம்பெனிகளில் இருந்து விதை நெல் வாங்கி உள்ளனர். இதனால் இதன் பலன் என்ன என்பது விளைச்சல் கிடைத்த பின்னரே தெரியவரும்.

---

தினகரன்

**நேரடி கொள்முதல் நிலையம் திறக்கவில்லை விவசாயிகள் நிலை கேள்விக்குறி!**

திருக்கோவிலூர்: விழுப்புரம் மாவட்டத்தில் இந்த ஆண்டு 50 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் விவசாயிகள் நெல்சாகுபடி செய்துள்ளனர். தற்போது அறுவடை சீசன் துவங்கி விட்ட வேளையில் ஒருசிலர் தாங்கள் சாகுபடி செய்த நெல்லை அறுவடை செய்து விற்பனைக்கு அருகே உள்ள ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு எடுத்து வந்து விற்பனை செய்து வருகின்றனர். கடந்த சில வாரங்களாக வெள்ளை பொன்னி நெல்லை தவிர்த்து இதர சன்னரக நெல்லும், மோட்டா ரக நெல்லும் கடந்த ஆண்டை விட கடு மையான வீழ்ச்சியை அடைந்துள்ளது. குண்டு நெல் மூட்டை ஒன்றுக்கு கடந்த ஆண்டு ரூ. 850 வரை விற்
பனையானது. ஆனால் தற்போது ரூ. 550 வரை தான் விற்பனை ஆகிறது. தற்போதுள்ள

தட்பவெப்ப நிலையில் சராசரியாக ஒரு ஏக்கர் பரப்
பளவில் 25மூட்டைகள் தான் விளைச்சல் தருகிறது. ஆனால் அந்த ஒரு ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடிக்கு உரம், விதைநெல், செலவு, நடவுப்
பருவத்தின் போது ஆகும் நடவு செலவு, உரம், பூச்சிக்கொல்லி மருந்து, களைஎடுத்தல், கூலி ஆட்கள் செலவு அதன்பின் உரமிடும் செலவு, அறுவடை செலவு என ஒரு ஏக்கருக்கு 17ஆயிரம் வரை செலவாகிறது.

சாகுபடி செய்யப்பட்ட நெல்லோ 25 மூட்டை தான் கிடைக்கிறது. அந்த நெல்லை விற்பனை செய்யும் போது
ரூ. 15ஆயிரத்திற்கு தான் விலை போகிறது. தவிடு மூட்டை ஒன்றுக்கு ரூ. 500 வரை விற்பனையாகிறது. நெல்மூட்டை ரூ. 550க்கு தான் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு சராசரியாக நெல் விவசாயிகளுக்கு ரூ.2ஆயிரம் நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் நெல் விவசாயிகளின் நிலை இன்றைக்கு கேள்விக்குறியாகி விட்டது.

ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் அவர்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. இதனால் அவர்கள் அரசு நிர்ணயம் செய்த விலை கிடைத்து விடுமோ என்று கருதி அவர்கள் நேரடி கொள்முதல் நிலையத்தை நாடும் போது அங்கும் உரிய விலை கிடைக்காமல் போவது மட்டுமின்றி, விவ சாயிகள் என்ற போர்வையில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இருந்து கொள்முதல் செய்த நெல்லை மீண்டும் விவசாயிகள் என்று கூறிக் கொண்டு நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

இங்கோ விவசாயிகள் பின்னுக்கு தள்ளப்பட்டு விவசாயிகள் என்ற போர்வையில் வரும் வியாபாரிகளுக்கு முன்னுரிமை அளித்து அவர்கள் நெல் மூட்டைகளை உரிய நேரத்தில் எடையிட்டு பண பட்டுவாடா செய்யப்
படுகிறது. விவசாயிகள் வார கணக்கில் காத்திருந்தும் அவர்களுக்கு குறித்த நேரத்தில் நெல்மூட்டைகளை எடையிட்டு பணம் பட்டுவாடா செய் யப்படுவதில்லை.

தற்போது திருக்கோவிலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்த விளைபொருட் களுக்கு பணம் பட்டுவாடா செய்யும் போது நேரடியாக வியாபாரிகள் வந்து பண பட்டுவாடா செய்யாமல் அவர்களுக்கு பதிலாக இடைத்தரகர்கள் தான் பண பட்டுவாடா செய்கின்றனர். அப்போது பணம் பட்டுவாடா செய்யும் போது ஆயிரத்திற்கு 5 ரூபாய் என பிடித்தம் செய்து கொண்டு தான் பண பட்டுவாடா செய்யப்படுகிறது.

விவசாயத்தில் கடும் நஷ்டத்தை சந்தித்து வரும் விவசாயிகளுக்கு பல ரூபங்களில் இன்னல்கள் நிகழ்ந்து கொண்டு வருவது வாடிக்கையான ஒன்றாகி விட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தாலுக்கா தலைநகரங்களில் உள்ள விற்பனை கூடத்தில் தினசரி 5 ஆயிரம் முதல் 50 ஆயிரம் மூட்டைகள் நெல் விற்பனைக்கு வந்து கொண்டிருக்கிறது. தாலுகா தலைநகரங்களில்

ஆங்காங்கே உள்ள ஒழுங்குமுறை விற்பனை  கூடத்தில் நேரடி நெல்கொள்முதல் நிலையம் அமைத்தால் விவசாயிகளுக்கு உரிய விலையும், உடனடி பண பட்டு வாடாவும் கிடைக்கும். அதுமட்டுமின்றி விவசாயிகள் என்ற போர்வையில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கொள்முதல் செய்த நெல்லை மீண்டும் நேரடி  கொள்முதல் நிலையத்தில் கள்ளத்தனமாக விற்பனை செய்வதை தவிர்க்க நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் நெல் கொண்டு வரும் போது  அவர்கள் விவசாயிகள் தானா என்பதை வருவாய்த்துறை ஆவணங்கள் மூலம் உறுதி செய்து கொண்டு நெல்கொள்முதல் செய்ய வேண்டும் எ ன்று விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுத்துள்ளனர். மாவட்ட நிர்வாகம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திலேயே நேரடி நெல்கொள்முதல்  நிலையம் திறக்க நடவடிக்கை எடுக்குமா?

### சங்கராபுரத்தில் தொய்வடைந்த தோட்டக்கலைத்துறை மானியம் வழங்க வேண்டுகோள்!

சங்கராபுரம்:   சங்கராபுரம் தாலுகாவில் 200க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளது. இதில் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட சுமார் 44  ஊராட்சிகளை உள்ளடக் கிய 100க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கிறது.

இந்த கிராமங்களில் சிறு குறு விவசாயிகள் பயன் பெறும் வகையில் தோட்டக்கலைத்துறை மூலம் மூங்கில், வாழை, கத்தரி, மிளகாய், கொய்யா,  தக்காளி, வெண்டைக்காய் போன்ற பயிர்கள் தோட்டக்கலைத்துறையின் அலுவலகம் மூலம் விதைகள் மற்றும் கன்றுகள் வழங்கப்பட்டு, அதன் மூலம் விவசாயிகள் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கு மானியம் வழங்கு வ தும் உண்டு. இந்த நிலை யில் சங்கராபுரம் தோட்டக் கலைத்  துறையின் கிளை அலுவலகம் தொய்வு அடைந்த நிலையில் உள்ளது. சங்கராபுரம் பகுதிகளில் விளை நிலங்கள் அதிகமாக உள்ளதால் விவசா யிகள் பருவ நிலைக்கு ஏற்றவாறு பயிர்களை பயிர் செய்து வருகின்றனர்.

இதில் முக்கியத்துவம் வாய்ந்த தோட்டக்கலை பயிரிடுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். எனவே சங்கராபுரம் தோட் டக்கலை துறை அலுவலகம் ஓரிரு நாட்கள் தான் திறந்து உள்ளது. இதனால் பயிரிடப்படும் விவசாயிகளுக்கு சரியாக மானியம் வழங்குவதில் லை. அரசு விளை நிலங்களை கொண்ட சங்கராபுரம் பகுதியில் தோட்டக்கலைத்துறை மூலம் அதிக அளவில் விவசாயிகள் தோட்ட பயிர்களை  பயிரிடுவதற்கு மாவட்ட நிர்வாகம் சங்கராபுரத்தில் உள்ள அலுவலகத்தை சரியான முறையில் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், விவசாயிகளுக்கு வழங்கும் மானியத்தை முறையாக வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### சுவி ஈமு பண்ணையில் முன்னாள் படைவீரர்களுக்கு ஈமு கோழி வளர்ப்பு பயிற்சி

பெருந்துறை: தமிழகத்தில் தற்போது ஈமு கோழியின் வளர்ப்பு அதிகரித்து வருகிறது. இந்நிலையில் முன்னாள் படைவீரர் நலத்துறையினரும் பெருந்துறை சுவி ஈமு பண்ணையும்

இணைந்து முன்னாள் பாதுகாப்பு படை வீரர்களுக்கு சுயதொழில் துவங்கவும், அதன் மூலம் வருமானம் பெறவும் ஈமு கோழி வளர்ப்பு குறித்து பயிற்சி முகாம் நடத்தினர். பயிற்சியை சுவி ஈமு பண்ணை உரிமையாளர் சங்கர் துவக்கி வைத்தார். திருச்சி, திருநெல்வேலி, தேனி, வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 20 முன்னாள் பாதுகாப்பு படை வீரர்கள் கலந்துகொண்டனர். இப்பயிற்சி முகாமில் ஈமு கோழியின் தோற்றம், வளர்ப்பு முறை, பண்ணை பராமரிப்பு மற்றும் இதன் மூலம் கிடைக்கும் மருத்துவ குணம் கொண்ட ஆயில், தோல், இறகுகளில் உள்ள பயன்பாடுகள் குறித்து பயிற்சியும் விளக்கமும் அளிக்கப்பட்டது. சுவி ஈமு பண்ணையில் செயலாளர் இந்துமதி மற்றும் முன்னாள்

காபி வாரியம் சார்பில் விவசாய இயந்திரங்களின் கண்காட்சி; நாளை நடக்கிறது

ஏற்காடு: ஏற்காடு காபி வாரியம் சார்பில் காபி விவசாயிகளுக்கு வேலை திறனை மேம்படுத்தும் வகையில் விவசாய இயந்திரங்கள் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காபி வாரிய வளாகத்தில் நாளை (24ம் தேதி) காலை 10 மணிக்கு நடைபெறும் கண்காட்சியில் களை எடுக்கும் இயந்திரங்கள், நிடில் மரக்கிளைகளை வெட்டும் கருவி, குழி எடுக்கும் கருவி, பேட்டரி மூலம் இயங்கும் உயர்தொழில்நுட்ப விசை தெளிப்பான்கள், இயந்திர சங்கிலி மூலம் இயங்கும் மரம் அறுக்கும் ரம்பம், பவர் டில்லர், சிறிய டிராக்டர் போன்ற இயந்திரங்கள் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இதில், காபி விவசாயிகள் பங்கேற்று பயன்பெறுமாறு வாரியத்தின் முதுநிலை தொடர்பு அதிகாரி பெரியசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

**தோட்டக்கலைத்துறை தகவல்**

**50 சதவீத மானிய விலையில் காய்கறி விதைகள் விநியோகம் தோட்டக்கலைத்துறை தகவல்**

கரூர்: 50 சதவீத மானிய விலையில் காய்கறி விதைகள் விநியோகம் செய்யப்படுவதாக தோட்டக்கலைத்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தாந்தோணி ஒன்றிய தோட்டக்கலை உதவி இயக்குனர் சொர்ணமாணிக்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தாந்தோணி ஒன்றியத்தில் 50 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்தற்கு தேவையான வெண்டை வீரிய ஒட்டுரக விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்ட விதிமுறைகளின்படி ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 0.50 எக்டேர் பரப்பிற்கு தேவைப்படும் ஒரு கிலோ வெண்டை வீரிய ஒட்டுரக விதைகள் 50 சதவீதம் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது என

தோட்டக்கலை துணை இயக்குனர் சதாசிவம் தெரிவித்துள்ளார்.

தற்போது தைப்பட்டத்தில் சாகுபடி செய்ய ஏற்ற வெண்டை வீரிய ஒட்டுரக விதைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. எனவே வீரிய ஒட்டுரக வெண்டை சாகுபடி செய்ய விரும்பும் தாந்தோணி ஒன்றிய விவசாயிகள் தங்களது விதை தேவைக்கு, தாந்தோணி ஒன்றிய உதவி தோட்டக்கலை அலுவலர்களை அணுகி 50 சதவீத மானிய விலையில் வெண்டை வீரிய ஒட்டுரக விதைகளை பெற்றுப் பயனடையலாம். மேலும் நிரந்தரமான பாசன வசதியுடைய பாசன ஆதாரங்களை கொண்ட விவசாயிகள் தாங்கள் பயிரிடும் வெண்டை பயிருக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்து பயனடையலாம்.

வெண்டை விதைகளை விதைப்பதற்கு முன்பாக விதையுடன் அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் உரம் மற்றும் டிரைகோடர்மான விரிடி உயிரி பூச்சிக்கொல்லி மருந்து கலந்து விதைப்பதன் மூலம் விதையுடன் பரவும் நோய்களை கட்டுப்படுத்தலாம். வெண்டை வீரிய ஒட்டுரக பயிர்களுக்கு எக்டருக்கு 217 கிலோ யூரியா, 625 கிலோ சூப்பர், 166 கிலோ பொட்டாஷ் உரத்தினை அடிஉரமாக இட வேண்டும். வீரிய ஒட்டுரக வெண்டை பயிர்களின் வளர்ச்சியினை அதிகப்படுத்த 19-19-19 என்ற நீரில் கரையும் உரத்தினை ஒரு லிட்டருக்கு 5 கிராம் என்ற அளவில் கலந்து விதைப்பு செய்த 30வது நாளில் இருந்து 3 முறை இலை வழியாக தெளிக்கலாம்.

வீரிய ஒட்டு ரக வெண்டை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு தேவைப்படும் தொழில்நுட்ப ஆலோசனைகளுக்கு தாந்தோணி ஒன்றிய தோட்டக்கலை துறை அலுவலர் நடராஜனை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு சொர்ணமாணிக்கம் தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## உற்பத்தி அதிகரிப்பு, ஏற்றுமதி சரிவு மிளகாய் விலை குறைய வாய்ப்பு

பி.கே. கிருஷ்ணகுமார்,கொச்சி

மிளகாய் உற்பத்தியில் முன்னணி மாநிலமான ஆந்திர பிரதேசத்தில் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில், ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் குறிப்பிடும்படியாக இல்லாததால், உள் நாட்டு சந்தையில் அதன் விலை குறையலாம் என கூறப்படுகிறது. கடந்த ஏப்ரல் முதல் நவம்பர் மாதம் வரையிலான காலத்தில் ரூ.1,266 கோடி மதிப்புள்ள 1.33 லட்சம் டன் மிளகாய் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. இது அளவின் அடிப்படையில் 24 சதவீதம் குறைந்தும்; மதிப்பின் அடிப்படையில் 20 சதவீதம் அதிகரித்தும் இருந்தது. ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார மந்த நிலையால் ஏற்றுமதி அதிகரிக்கும் வாய்ப்புக்கள் இல்லை என்று கூறப்படுகிறது.

நம் நாட்டை பொறுத்தவரை மத்திய பிரதேச மாநிலத்தில் மிளகாய் பருவத்தின் முதல் சாகுபடி நடைபெறுகிறது. அங்கு நடப்பு பருவத்தில் உற்பத்தி 20 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆந்திர பிரதேசத்தில், பிப்ரவரி மாதத்தின் இடையில் மிளகாய் வரத்து ஆரம்பமாகும்.

பருத்தியைவிட மிளகாய் அதிக லாபம் தரும் பயிராக இருப்பதனால் கர்நாடகா மற்றும் ஆந்திர பிரதேச மாநில விவசாயிகள் தற்போது மிளகாய் சாகுபடியில் ஆர்வம் காட்டத்துவங்கியுள்ளனர். இதன் காரணமாக ஆந்திர மாநிலத்தில் மிளகாய் சாகுபடி செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு 10–15 சதவீதம் அதிகரித்துள்ளது. மிளகாய் உற்பத்தி அதிகரிப்புக்கு இது ஒரு காரணமாக கூறப்படுகிறது.